தி இந்து



▲ புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள தமிழர் பாரம்பரிய குடும்ப புகைப்பட கண்காட்சியை ஆர்வமுடன் பார்க்கும் வெளிநாட்டினர்.

# பாரம்பரிய தமிழ் குடும்பங்கள் புகைப்படக் கண்காட்சி

## புதுச்சேரியில் வெளிநாட்டினர் ஆர்வம்

■ புதுச்சேரி

புதுச்சேரியில் தமிழ் பாரம்பரிய குடும்பங்களின் புகைப்பட கண்காட்சியை பிரெஞ்சு ஆய்வு நிறுவனம் ஒரு மாத காலம் நடத்துகிறது. நேற்று தொடங்கிய இந்த கண்காட்சியை ஏராளமான வெளிநாட்டினர் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

புதுச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனம், பாண்டி ஆர்ட் அமைப்பு ஆகியவை சார்பாக தமிழ் பாரம்பரிய குடும்பங்களின் புகைப்படக் கண்காட்சி நேற்று தொடங்கி ஒரு மாத காலம் நடத்தப்படுகிறது. புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் பின்புறம் கண்காட்சி நடத்தப்படுகிறது. இந்த கண்காட்சியில் பிரெஞ்சு ஆய்வு நிறுவன ஆய்வாளர் ஜோயி ஹெட்லி மற்றும் இந்திய, பிரான்ஸ் ஆய்வாளர்களால் தமிழகம் முழுக்க சேகரித்த பழைய புகைப்படங்களை காட்சிக்கு வைத்துள்ளனர்.

இது குறித்து ஆய்வாளர்கள் கூறும்போது, “ஒரு நூற்றாண்டு காலத்தில் தமிழர்கள் ஸ்டுடியோ சென்று படம் எடுத்தனர். தம்பதி, குடும்ப புகைப்படம், சகோதர, சகோதரிகள், தந்தை, தாய் ஆகியோர் புகைப்படங்கள் அதில் இடம் பெற்றுள்ளன. முன்பு வீடுகளில் புகைப்படங்களை சுவரில் மாட்டி வைத்திருப்பார்கள். தற்போதும் பல வீடுகளில் இந்த பழக்கம் உள்ளது. புகைப்படங்கள் மூலம் தமிழ் சமூக வரலாறு, குடும்ப பாரம்பரியம், உடை ஆகியவற்றையும் புத்தகம், வாகனங்கள் மூலம் அவர்களின் பொருளாதாரத்தையும் அறியலாம். அழிந்து வரும் இந்த புகைப்படங்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புகைப்படங்களை தமிழக மற்றும் புதுச்சேரி கிராமங்களில் பிரெஞ்சு ஆய்வு நிறுவனம் சேகரித்துள்ளது.

இவற்றை டிஜிட்டல் முறைப்படி பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறது” என்று குறிப்பிட்டனர்.